IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.1/2023

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | SANKAR |
| FATHER'S NAME | : | VELU |
| VILLAGE | : | MELPATTI |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 04th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேல்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2021ஆம் வருடம் உதவி ஆயவாளராக திரு.ஆறுமுகம் அவர்கள் பணிசெய்த விவரம் எனக்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலில் சென்றுவிட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 20.09.2021ம் தேதி அன்று பகல் 10.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகம் நிலைய பொறுப்பில் இருந்தபோது குடியாத்தம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்று தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜானகிராமன் த–பெ முருகேசன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று அதன் தன்மை நிலைய குற்ற எண்.154/2021 இதச பிரிவுகள் 294 (பி), 323, 324, 506 (2) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

அன்றைய தினமே மதியம் சுமார் 02.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் தண்டபாணி மற்றும் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். பின்னர் அதே சாட்சிகளின் முன்னிலையில்

சம்பவ இடத்திலிருந்து பகல் 02.30 மணியளவில் 2 1 /2 அடி நீளமுள்ள இரும்பு கம்பி ஒன்று கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். பின்னர் சாட்சிகள் ஜானகிராமன், ரம்யா, பாஸ்கர், சுதாகர், தண்டபாணி மற்றும் வெங்கடேசன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளைத் தேடி வந்த நிலையில் அன்றைய தினமே மாலை 03.30 மணியளவில் குருநாதபுரம் பஸ்ஸ்டாப்பிடம் இருந்த எதிரிகளை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்பு அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றார்.

புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும், அ.சா.1 ற்கு வழங்கிய விபத்து பதிவேட்டு அ.சா.ஆ.8 ஆகவும், காயசான்றிதழ் அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. 2 1 /2 அடி நீளமுள்ள இரும்பு கம்பி சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

உதவி ஆய்வாளர் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரர் மற்றும் சாட்சி ரம்யா வீடு கட்டுவதில் ஏற்பட்ட பணம் கொடுக்கல் வாங்கலில் உள்ள பிரச்சனைக்காக பொய் புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரர் மற்றும் அவரது மனைவி இருவரும் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் அதிகாரத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,

Judicial Magistrate,

Gudiyatham.